## சென்னை, தரமணியில் உலக வங்கி சார்பில்

# நவீன உலகளாவிய வணிக மையம்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 11–

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) சென்னை, தரமணியில் உலக வங்கியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன உலகளாவிய வணிக மையத்தை (Global Business Centre) திறந்து வைத்தார்.

கடந்த 2001ஆம் ஆண்டு 70 அலுவலர்களைக் கொண்ட ஒரு சிறிய குழுவுடன் நிறுவப்பட்ட சென்னை உலகளாவிய வணிக மையம் (Global Business Centre) விரிவாக்கப்பட்ட போது செப்டம்பர் 2006ல் தரமணியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது மார்ச் 2025ன்படி 1,500க்கும் மேற்பட்ட பணியாளர்களோடு, உலகளவில் 130க்கும் மேற்பட்ட உலக வங்கி அலுவலகங்களின் மூலம், 189 உறுப்பு நாடுகளுக்குச் சேவை செய்யும் ஒரு முக்கிய உலகளாவிய மையமாக வளர்ந்துள்ளது. அதன் திறமைமிக்க குழு, வலுவான உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டாளர் நட்பு நிர்வாகம் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டு, தீவிரமான உலகளாவிய தேடலுக்குப் பிறகு, சென்னை மையம் உலக வங்கிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**அதிநவீன வசதி!**

கடந்த 24 ஆண்டுகளில், தமிழ்நாட்டுப் பணியாளர்களின் முன்மாதிரியான அர்ப்பணிப்பு மற்றும் மீள்தன்மை மூலம், சென்னை உலகளாவிய வணிக மையம் உலக வங்கிக் குழுமத்தின் பல நிறுவன செயல்பாடுகளை ஆதரிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. இந்த தரமணி மையம் புதிய ஒத்துழைப்பு மண்டலங்கள் மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் உள்கட்டமைப்புடன் கூடிய அதிநவீன வசதியை வழங்குகிறது.

உலக வங்கி குழுமத்தின் முக்கிய செயல்பாடுகளை ஆதரிப்பதில் சென்னை உலகளாவிய வணிக மையம் முக்கிய பங்கு வகிக்கிறது. LEED பிளாட்டினம் சான்றிதழ் மூலம் காலநிலை மீள் கட்டமைப்புக்கு ஆதரவளித்து, சூரிய மின்சக்தி மற்றும் மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட வசதிகளும் இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**அத்தியாவசிய நிறுவன சேவைகள்!**

நிதி, கணக்கியல், கொள்முதல், நிர்வாகம், அறிவு மேலாண்மை, கருவூலம், மனித வளங்கள், இடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு களங்களில் அத்தியாவசிய நிறுவன சேவைகளை இந்த மையம் தொடர்ந்து வழங்கும்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, ஒன்றிய அரசின் கேபினட் செயலாளர் முனைவர் டி.வி. சோமநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் வென்காய் ஜாங், உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் அகஸ்டே டானோ கோமே, சென்னை மையத் தலைவர் சுனில் குமார், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர். பிரஜேந்திர நவ்நீத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உலக வங்கியின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




# வனத்துறை - இந்து சமய அறநிலையத்துறை ஒருங்கிணைப்புக் கூட்டம்!

### அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் – பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது!

*சென்னை, ஜூன் 11 -*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் முன்னிலையில் நேற்று (10.06.2025) தலைமைச் செயலகத்தில் வனத் துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் மதுரை மாவட்டம், சதுரகிரி சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய பக்தர்கள் எளிதாக சென்றுவர ஏதுவாக மலைப்பாதை அமைத்தல், வழுக்கும் பாறைகள் அமைந்துள்ள இடங்களில் கைப்பிடிகள், மலைமீதுள்ள ஏழு ஓடைகளில் இரும்பு பாலங்கள் அமைத்தல், அன்னதானக் கூடம் மற்றும் பக்தர்கள் தங்குமிடம் கட்டுதல், அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில் முதல் மலைமேல் அமைந்துள்ள இராக்காயி அம்மன் திருக்கோயில் வரை சாலையை சீரமைத்தல், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு மாற்று மலைப்பாதை அமைத்தல், ஈரோடு மாவட்டம், பண்ணாரி, பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்திடும் வகையில் நிலம் வழங்குதல், கோவை மாவட்டம், பெரியதடாகம் அனுவாவி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கம்பிவட ஊர்தி அமைத்திட வனத்துறைக்கு சொந்தமான நிலம் வழங்குதல் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*ஈரோடு மாவட்டம், சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கெஜஹட்டி, ஆதிகருவண்ணராயர் திருக்கோயில், கொங்கஹள்ளி, மல்லிகார்ஜுன சாமி திருக்கோயில், கோவை மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயில், மதுக்கரை வட்டம், மரப்பாலம், தர்மலிங்கேஸ்வரர் திருக்கோயில், தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை, தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயில், வே.முத்தம்பட்டி, ஆஞ்சநேயர் திருக்கோயில், நெருப்பூர், முத்தித்தராயசுவாமி திருக்கோயில் மற்றும் திம்மராய சுவாமி திருக்கோயில், விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர், நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலின் உபகோயிலான காட்டழகர் மற்றும் பேச்சியம்மன் திருக்கோயில், இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயிலின் உபக்கோயிலான இரட்டைத்தாளை முனியசாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் மலைப்பாதை உரிமைக் கட்டணம், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்கிட நிலஉரிமை மாற்றம், திருக்கோயில்களில் மராமத்து பணி மேற்கொள்ள அனுமதி, திருக்கோயிலை சுற்றியுள்ள வனத்துறை நிலங்களுக்கான குத்தகை காலம் நீட்டித்தல், கிரிவலப் பாதையை சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்குதல் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, இப்பொருண்மைகள் தொடர்பாக வனஉயிரின பாதுகாப்பு சட்டத்தின்படி உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.*

*இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, , துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி. முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் ராகேஷ் குமார் டோக்ரா ., கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் செயலாளர் பூரணி, கூடுதல் ஆணையர்கள் பொ. ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, மாவட்ட வன அலுவலர்கள், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*


